# இதயம் நிறைந்த இரு தமிழர்கள் கன்பராவில் செய்த சாதனைகள்

யோகன்

அவுஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலும் தமிழ் அமைப்புகள் பல இயங்குகின்றன..

சமய, சமூக, கலை, இலக்கிய, அரசியல், விளையாட்டு மற்றும் பல்வேறு தொண்டர் அமைப்புகள் மத்தியில் மூத்த பிரசைகள் அமைப்பும் குறிப்பிடத்தக்க ஒன்றாக உள்ளது என்பது யாவருக்கும் தெரிந்ததே.

ஆஸ்திரேலியாவில் 2018 இல் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி 3.8 மில்லியன் மக்கள் அதாவது சனத்தொகையின் 15 வீதமானோர் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பது தெரிய வந்தது. எனவே இன்று வாழும் முதியவர்களின் எண்ணிக்கையில் ஒரு பெரிய வளர்ச்சி ஏற்பட்டுள்ளது அண்மைய கணக்கெடுப்புகளில் தெரிகிறது.

மருத்துவ வசதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் ஒவ்வொருவருக்கும் உடல் நிலை மற்றும் தேக ஆரோக்கியம் பற்றிய அறிவும் மனிதனின் சராசரி ஆயுட்காலத்தை அதிகரித்துள்ளதென்பது உலகளாவிய உண்மையாகும்.

இந்த காரணங்களால் மூத்த பிரஜைகள்தங்கள்வயதோடு ஒத்தவருடன்தொடர்பாடவும், சந்திக்கவும் வேண்டிய தேவை இன்று அதிக அளவில் உள்ளது.

அதுவும் சனத்தொகை குறைந்த கன்பெராவில், குளிர் வாட்டி எடுக்கும் இப்பிரதேசத்தில் வீட்டுக்குளேயே முடங்கிக் கிடக்கும் அபாயம் முதியவர்களுக்கு ஏற்படுவதற்கு சாத்தியம் அதிகம். எனவே அவர்கள் ஓரிடத்தில் சந்திப்பதற்கும் உரையாடுவதற்குமான ஒரு பொது வெளி தேவையாகிறது.



அமரர்கள் திரு தாமோதரலிங்கம், திரு மயில்வாகனம்



தமிழ் மூத்த பிரசைகள் சங்க மண்டபம்

ஆயினும் ஆஸ்திரேலியாவின் எந்த மாநிலங்களிலும் எந்த மூத்தபிரசைகள் சங்கங்களும் அதற்கென தனியான கட்டடத்தைக் கொண்டிருக்கவில்லை.

ஆனால் கான்பெராவில் வாழ்ந்து மறைந்த இருவர் இதை சாத்தியமாக்கி விட்டுப் போய் இருக்கிறார்கள்.

கன்பெராவின் இரட்டையர் என்று சொல்லக் கூடிய திரு தாமோதரம் பிள்ளை, திரு மயில்வாகனம் ஆகிய இருவரின் தீர்க்கதரிசனமான சிந்தையினாலும், அயராத அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பினாலேயுமே இது சாத்தியமானது. ஒருவருக்கொருவர் உறுதுணையாய் நின்று எவருமே எண்ணித் துணியாத பெரும் சவாலை எதிர்கொண்டு வென்றவர்கள் இந்த இருவர்.

இன்று கன்பெராவில் ஐசாக் என்னுமிடத்திலுள்ள 5000 சதுர மீற்றர் நிலத்தில் தமிழ் மூத்த பிரசைகள் சங்கத்தின் ஒரு மண்டபமொன்று எழுந்து நிற்கிறது. இதன் விஸ்தீரணம் 875 சதுர மீற்றர். இதே நிலத்திலேயே தமிழ் மூத்த பிரசைகள் சங்கத்துக்கு உரித்தான 4 வீடுகளும் உள்ளன.

தாமோதரலிங்கம் ஒரு பொறியியலாளர். இவர் பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபத்தை நிர்மாணித்த பொறியியலாளர் குழுவில் தலைமைப் பொறியியலாளராக பணியாற்றியவர். இங்கு கன்பெராவில் நகராட்சி திணைக்களத்தில் பொறியியலாராகப் பணிபுரிந்த அனுபவத்தின் காரணமாக இவரால் வீடமைப்பு மற்றும் மண்டபம் கட்டும் திட்டமொன்றுக்கான நிலம், கட்டடம் சம்பந்தமாக அணுக வேண்டிய அரச நிறுவனங்கள் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பங்கள் என்று அனைத்துமே நன்கு தெரிந்திருந்தது. தொடர்ந்து 14 வருடங்கள் அவர் தமிழ் மூத்த பிரசைகள் சங்கத்திற்கு தலைவராயிருந்தார்.

மயில்வாகனம் ஒரு கணக்கியலாளர். சமூக வீட்டுத் திணைக்களத்தின் வீடுகளை நிர்வகிக்கும் வண்ணம் அவற்றை அரசிடமிருந்து பொறுப்பேற்று அதில் கிடைக்கும் வருவாயில் மூத்த பிரசைகள் சங்க காணியினதும் கட்டடக் தொகுதியினதும் கடனை அடைக்கும் மூலோபாயத்தை வகுத்ததில்இவருக்கும்பெரும் பங்குண்டு. இதனாலேயே சங்கத்தின் வீட்டுப் பராமரிப்பு உப குழுவினைத் தோற்றுவித்து 1999 இல் அதில் அவர் முதலாவது தலைவரானார்.

இந்த மூத்த பிரசைகள் சங்கத்துக்கென ஒரு காணியை வாங்கி அதில் நான்கு வீடுகளையும் அமைத்து ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளனர் என்றால் இது எப்படி சாத்தியமானது?

காணியினதும் மண்டபம் மற்றும் 4 வீடுகளின் கடன் தொகையை செலுத்தி எந்த நிலுவையுமில்லாது இன்று அது தலை நிமிர்ந்து நிற்கிறதென்றால் அதன் இரகசியமென்ன?

1996 இல் ஆரம்பிக்கப்பட்ட கன்பரா மூத்த பிரசைகள் குழுவுக்கு 1998 இல் தாமோதரம்பிள்ளை அவர்கள் தலைவரானபோது மூத்த பிரசைகள் கூடிப் பேசவும், கலாசார பாரம்பரியங்களை பேணவும் ஒரு மண்டபம் அமைக்குந் திட்டத்துக்கான கனவு இருந்தது.

1999 இல் அரசாங்கத்தின் வீடுகளை நிர்வகிப்பதற்கு பொது அமைப்புகளுக்கும் அனுமதி வழங்க அரசாங்கம் முன்வந்தது. இதன் அடிப்படையில் வீடமைப்பு திணைக்களத்தின் 11 வீடுகளை பராமரிக்கும் வாய்ப்பு மூத்த பிரசைகளுக்கு கிடைத்தது. இது சங்கத்திற்கு வருமானத்தை தரக்கூடிய வகையில் அமைந்ததால் ஒரு வரப்பிரசாதமாகியது. இந்த உற்சாகத்திலேயே ஏழு லட்சம் டொலர் திட்டமாக மண்டபத்தையும், மூத்த பிரசைகளுக்கென நான்கு வீடுகளையும் பிரேரித்து 2002 இல் விண்ணப்பத்தை அரசிடம் சமர்ப்பித்திருந்தனர்.

2004 இல் இக்கட்டடங்களின் முதலாம் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டபோது செலவினம் 850,000 டொலரைத் தாண்டியிருந்தது.

அரசாங்கம் முதலில் 400,000 டொலர் தொகையை வழங்க முன் வந்திருந்த போதிலும் பின்னர் மேலும் 150,000 வழங்கியபோதிலும் மீதி 300,000 டொலர்களையும் தமிழ் சமூகத்திலிருந்து மற்றும் வாங்கிக் கடனாயும் பெறவேண்டிய கட்டத்துக்கு மூத்த பிரசைகள் தள்ளப்பட்டனர்.

பல தனியாட்கள் நீண்ட காலக்கடன் அடிப்படையில் பணத்தை வழங்க முன் வந்தனர். இருந்தும் போதாமை இருந்தது. சமூக வீடுகளை பராமரிக்கும் மூலம் கிடைத்த வருவாய் மற்றும் பல நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் மூலமும் பணம் திரட்டினர்.

2007 இல் கட்டட வேலைகள் முடிவுக்கு வந்தன. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் கொந்தளிக்கும் கடலில் கப்பலை செலுத்திய மாலுமிகளாக மூத்த பிரசைகள் சங்கத்தை பாதுகாப்பாக கரை சேர்த்த பெருமை தாமோதரலிங்கம், மயில்வாகனம் ஆகிய இருவரையுமே சாரும்.

இவர்கள் இருவருக்கும் பின் புலத்தில் நின்று உதவிய பலரையும் தாமோதரலிங்கம் நன்றியுடன் நினைவு கூர்ந்து கடைசியாக தயாரித்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு கர்ம வீரனாக கடமை முடித்த திருப்தியில் அவர் தாய் மண்ணுக்கு சென்றிருந்த வேளையில் 2013 இல் அங்கேயே காலமாகி இறுதிக் கிரியைகளும் அங்கேயே நடைபெற்றன. மயில்வாகனம் அதற்கு முன்னரே 2010 இல் இங்கே கன்பெராவிலேயே காலமாகிவிட்டார்.

தற்போது மொத்தம் பதினோரு அரசாங்க வீடுகளை நிர்வகிக்கும் பொறுப்பினை எடுத்துள்ள மூத்த பிரசைகள் சங்கத்தினர் இன்று மண்டபத்துக்கும் 4 வீடுகளுக்கும் இருந்த தனியார் கடன்களையும், வங்கிக் கடன்களையும் கட்டி முடித்து அவற்றுக்கு சொந்தக்காரர்களாயுள்ளனர்.

குறைந்த வருமானமுடையோரும், பல விதமான பொருளாதார நெருக்கடியிலுள்ளோரும் புதிதாக குடிவருவோருக்குமான அரசாங்கத்தின் வீடுகளை குறைந்த வாடகையில் பெற்றுக் கொடுப்பதற்கு தமிழ்மூத்தபிரசைகள்சங்கம்தொடர்ந்து உதவி வருகிறது.

தமிழ் மூத்த பிரசைகள் மண்டபத்தை பலசமூகங்களை சேர்ந்த பல்வேறு அமைப்புகளும் தனியாரும் வாடகைக்கு எடுக்கின்றனர். இதைவிட, மூத்த பிரஜைகள் நடத்தும் கூட்டங்கள், கருத்தரங்குகள், உடற்பயிற்சி மற்றும் பயிற்சிப் பட்டறைகள் என்று இதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

காலப்போக்கில் சனத் தொகை அதிகரிப்பினால் இந்த மண்டபம் போதாமை நிலையடையும். எனவே சொந்தமாகவுள்ள இந்த விசாலமான காணியில் பெரிய மண்டபம் மேடையுடன் கூடிய-தாக அமைக்கப்படின் இதன் பயன்பாடு இன்னும் அதிகரிக்கலாம்.

இன்று மூத்த பிரசைகள் சங்கம் ஒரு திருப்புமுனைக்கால கட்டத்தில் நிற்கின்றது. கடந்த காலத்தில் இருந்த நிதி நெருக்கடிகள் இல்லையென்றாலும், நிர்வாகத் திறன் கொண்ட ஆளுமைகளும் தலைமைத்துவப் பண்புகள் கொண்ட ஆளுமைகளும் நிரம்பிய ஆற்றல் மிக்க குழுவாக இந்த அமைப்பு அடுத்த தசாப்தத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் கட்டத்திலுள்ளது. இதயம் நிறைந்து நிற்கும் அந்த அமரர் இருவரின் கனவை மெய்ப்படவைக்க இன்னும் பல தூரம் செல்ல வேண்டியுள்ளது.

அதற்கான தேவையும் காலமும் கனிந்து வருகிறதென்பதில் நம்பிக்கை கொள்வோம்.



தமிழ் மூத்த பிரசைகள் சங்க வீடுகள்